IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
| | | PW's | 7 |
| NAME | Muthirul | CASTE | |
| S/O / W/O | Balu | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 23th day of September 2019

முதல் விசாரணை: 23-09-2019

நான் சிவகங்கை மாவட்டம் கொத்தங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். முத்து என்பவரை தெரியும். அவரின் மகளை தெரியும். எதிரி சந்திரன் என்பவரை தெரியும். சுமார் 7 வருடத்திற்கு முன்பு அசா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 13 பவுன் நகையும், ரூபாய் 50 ஆயிரமும் சீர்வரிசையும் கொடுத்ததாக சொன்னார்கள். குடும்ப பிரச்சனை சம்பந்தமாகவும் வரதட்சணை கூடுதலாக கேட்டு ரூபாய் 2 லட்சமும் நகையும் கேட்டதாகவும், நாத்தனார்கள் தொந்தரவு சம்பந்தமாக அசா.1 மாமாமதுரை மகளிர் கா.நி புகார் கொடுத்திருப்பதாகவும் அங்கு வைத்து பேச வேண்டும் என்று முத்து சொல்லி என்னையும் மற்ற இருவரையும் அழைத்து கொண்டு கா.நி சென்றார். கா.நி வைத்து நாங்கள் பேசினோம். அப்போது 1வது எதிரி அசா.1 ஐ அழைத்து கொண்டு தனிக்குடித்தனம் செல்வதாகவும் வீடு பார்ப்பதாகவும் சொன்னார். அதன் பேரில் புகாரை அசா.1 வாபஸ் வாங்கினார். அசா.1 யிடம் சொன்ன வாக்குறுதியின் படி எதிரி நடக்காமல் மறுபடியும் பிரச்சனை செய்தார். அசா.1ன் நகைகளை திருப்பி கொடுக்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

முத்து உங்களது ஒரே ஊர்காரர் உறவுமுறைகாரரும் ஆவார் என்றால் சரிதான். கல்யாணம் பேசியது மாப்பிள்யை வீடு வந்தது விபரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். திருமணத்தின் போது 13 பவுன் நகையும், ரூபாய் 50 ஆயிரமும் சீர்வரிசையும் கொடுத்ததாக என்று அவர்கள் சொன்னதை வைத்து தான் கேள்விபட்டு தான் சொல்கிறீர்களா என்றால் சரிதான். வரதட்சணை கூடுதலாக கேட்டு ரூபாய் 2 லட்சமும் நகையும் கேட்டதாகவும், நாத்தனார்கள் தொந்தரவு சம்பந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது கா.நி சென்ற பின்னர் தான் தெரியும் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது நீங்கள் உடன் சென்றீர்களா என்றால் இல்லை விசாரணைக்கு தான் சென்றேன். விசாரணைக்கு நானும் இன்னொருவரும் வந்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. கா.நி வைத்து பேசியதோடு சரி அசா.1 சோழவந்தானில் வந்து வாழ்ந்தது எதுவும் எனக்கு தெரியாது. அசா.1 புகார் கொடுத்த கா.நி வைத்து பேசியது 2013ம் வருடம் என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. உங்களை எந்த போலிசார் விசாரித்தார்கள் என்றால் மானாமதுரை, சமயநல்லூர் காவல்துறையினர் மற்றும் சமூகநலத்துறை அலுவலகள் விசாரித்தார்கள். முத்து என்னை அழைத்து வந்து சமயநல்லூர் கா.நி வந்த போது தான் என்னை

விசாரித்தார்கள். சமயநல்லூர் போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. போலிசார் விசாரணையிலாவது தேதியை சொன்னீர்களா என்றால் என்னிடம் தேதி எதுவும் கேட்கவில்லை நான் சொல்லவும் இல்லை. நீங்கள் சொன்னது மாதிரி எதுவுமே நடக்கவில்லை முத்துக்கு நீங்கள் வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக போலிசார் சொல்லியபடி நீங்கள் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.